# ஏப்ரல் - 18- செவ்வாய்

**புனித அப்பொலோனியுஸ்**

**ஆண்டவரின் வாக்கு நேர்மையானது: அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை. திபா. 33:4**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 36 – 41

பேற்தகொஸ்தே நாளில் பேதுரு யூதர்களை நோக்கிக் கூறியது: நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்." அவர்கள் இதைக் கேட்டு உள்ளம் குத்தப் பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.அதற்குப் பேதுரு, அவர்களிடம், "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள்.ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலையிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது" என்றார்.மேலும் அவர் வேறுபல சான்றுகளை எடுத்துக்கூறி, "நெறிக்கெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தினார். அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது

## நற்செய்தி : யோவான் 20 : 11 – 18

அந்நாட்களில் மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுது கொண்டிருந்தார் அழுது கொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மரியாவிடம், "அம்மா, ஏன் அழுகிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எனக்குக் தெரியவில்லை" என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவரிடம், "ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், "ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்" என்றார். இயேசு அவரிடம், "மரியா" என்றார். மரியா திரும்பிப் பார்த்து, "ரபூனி" என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு "போதகரே" என்பது பொருள். இயேசு அவரிடம், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், "என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்" எனச் சொல்" என்றார். மகதலா மரியா சீடரிடம் சென்று, "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்றார் தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

**தியானம்:** கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிழ்விலே திழைத்தவர்களாக அவர் இவ்வுலகத்திற்கு கொண்டுவந்த சமாதானத்தை பகிர்ந்தவர்களாக இவ்வாரத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.கிறிஸ்துவின் இறப்பில் முக்கிய பங்காற்றியவர்கள், அவரது உயிர்ப்பின் பின் மனமாற்றம் பெற்றவர்களாக " நாங்கள் என்ன செய்ய வேண்டும் "? என்று சீடர்கள் கேள்வி எழுப்புகின்றனர். " நாங்கள் என்ன செய்ய வேண்டும்"? இது நாம் யாவரும் கேட்க வேண்டிய அடிப்படையான கேள்வி. நம் பாவங்களுக்காக மனம் வருந்தினால் மட்டும் போதாது. கடவுள் நம்மை மன்னிக்க அனுமதிக்க வேண்டும். பின்னர் மன்னிக்கப்பட்டவர்களுக்குரிய வாழ்க்கையை வாழ வேண்டும். மனம் மாறுதல் என்பது பாவத்திலிருந்து திரும்புதல், சுயநலத்திலிருந்தும், கடவுளின் கட்டளைகளுக்கு எதிரான கிளர்ச்சியிலிருந்தும் பாதையை மாற்றுதல், நாம் கிறிஸ்துவை நோக்கியும் திரும்ப வேண்டும். அவரது மன்னிப்பு, கருணை, வழிகாட்டுதல் , திட்டம் யாவற்றையும் நாட வேண்டும். கடவுளே நம்மை மீட்க இயலும். திருமுழுக்கு நம்மை கிறிஸ்துவுடனும் திருச்சபையுடனும் இணைக்கின்றது. அது சீடத்துவத்திற்கான நிபந்தனை. நம்பிக்கையின் அடையாளம். இன்றைய நற்செய்தியில் மரியா யேசுவை அடையாளம் கண்டு கொள்கின்றார். "என்னைப்பற்றிக் கொள்ளாதே "என யேசு கூறுவதன் அர்த்தத்தை நாம் நன்கு புரிந்து வாழ்வாக்குவோம். நாம் யேசுவை கண்டு வெறுமனே வெளிவேடமாக ஏனோ தானோ என்று பின்பற்றுவது மட்டுமல்ல மாறாக யேசுவோடு அன்புறவில் வாழ்பவர்கள், அன்புறவில் தொடர்ந்து நிலைத்திருப்பதில் மட்டும் ஆர்வம் காட்டாது அவர்கள் பணியாற்றுவதிலும் அக்கறை காட்ட வேண்டும். பலன் தருவதற்கென்றே கொடிகள் செடியோடு இணைந்திருக்கின்றன. எனவே யேசுவை சுவைக்கின்ற நாம் அவரைப் பறைசாற்ற முன்செல்வோம். முயற்ச்சி எடுப்போம்.